**கோபிசெட்டிபாளையம் நகராட்சி**

**15.05.2025 ந் தேதி நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள் தீர்மான நகல்**

1. கோபிசெட்டிபாளையம் நகராட்சி 2024–2025–ம் நிதியாண்டு பொதுநிதி, குடிநீர் நிதி, கல்வி நிதி, ஆகிய கணக்குகள் வாரியாக தயார் செய்து தணிக்கைக்கு முன்னிலை படுத்த தனியார் கணக்கு ஆலோசகர் (Account Consultant) மூலம் பணிகள் மேற்கொண்டு முடித்து கொடுக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/– மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2273/2020/பி1)

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1154**

2. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.34238/2017/அ4, நாள்.07.02.2025–ல் கோபிசெட்டிபாளையம் நகராட்சி வருமான வரி தொகை ரூ.19,76,530/– நிலுவை உள்ளது. அதனை விரைந்து சரி செய்து அல்லது செலுத்தி அறிக்கை சமர்பிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. TAN எண்ணில் உள்ள வருமான வரி நிலுவை தொகையில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்ய Correation Request Traces மென்பொருள் வாயிலாக ரூ.3,24,930/– சரி செய்தது போக நிலுவை தொகை ரூ.16,59,000/–சரி செய்யப்பட வேண்டும் அல்லது செலுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் வருமான வரி துறையின் சிறப்பு அறிவிப்பு Finance Act (No–2) 2024–ன் படி 2007 – 2008 முதல் 2018 – 2019 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு TDS – ல் உள்ள தவறுகள் தாமதக்கட்டணம், Instrest செலுத்தவும்,மற்றும் Form 16 –ல் உள்ள திருத்தங்கள் (Corretion Returen ) அனைத்தும் 31.03.2025க்குள் சரி செய்து கொள்ளப்பட வேண்டும் என அறிவிப்பு வழங்கியதன் பேரில் மேற்படி குறைகள் நிவர்த்தி செய்ய Marit Computers Erode அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டதில் நிலுவை தொகை ரூ. 19,76,530/– ல் இருந்து ரூ.3,38,740/– ஆக சரிசெய்து கொடுத்துள்ளார்கள். மேற்படி TDS –ல் உள்ள தவறுகள் தாமதக்கட்டணம், Form 16 இல் திருத்தங்கள் அனைத்தும் Correction Returen Filling செய்தமைக்கு கட்டணம் ரூ. 54,280/– Marit Computers அவர்களிடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.(ந.க.எண்.2013/2024/பி1 )

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1155**

3. இந்நகராட்சியின் 2025–2026–ஆண்டிற்கு தேவையான எழுதுபொருட்கள். அனைத்து விதமான வரி மற்றும் வரியில்லா இனங்களின் இரசீதும், படிவங்கள், அம்மா உணவக டோக்கன்கள், அனைத்துபிரிவு தொடர்பான பதிவேடுகள் கோப்பு மூடுதாள்கள். அஞ்சல் வழி மற்றும் உள்ளூர் தபால்கள் அனுப்ப தபால் உரைகள் ஆகியவை கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது. மேலும், தற்போது நடைபெறும் நகர்மன்ற கூட்டம், ஆய்வுக்கூட்டம். கணக்கெடுப்பு பணிகள் மற்றும் பல்வேறு பணிகளுக்கான அறிக்கைகள் தயார் செய்ய அதிகபடியான பேப்பர்கள் மற்றும் இதர பதிவேடுகள் தேவைப்படுகிறது. எனவே, மேற்கண்ட பொருட்களை கொள்முதல் செய்ய உத்தேச செலவினம் ரூ. 3,00,000/– (மூன்று இலட்சம் மட்டும்) ஆகும். மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.548/2025/டி2)

**அலுவலகக் குறிப்பு:** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. பொதுநிதியில் மேற்கொள்ளலாம்

**அலுவலகக் குறிப்பு: 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1156**

4. இந்நகராட்சியில் 2025−2026 ஆம் ஆண்டிற்கான கடித போக்குவரத்திற்கான அன்றாட அலுவலக கடிதங்கள் மற்றும் நகராட்சிகளின் வரி விதிப்புகள் தொடர்பான கேட்புக்களை (Demand Notice) தபால் வழியாக அனுப்பி வைக்கவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/− ஆகும். மேற்படி செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.549/2025/டி2)

**அலுவலகக் குறிப்பு:** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்

2. பொதுநிதியில் மேற்கொள்ளலாம்

**அலுவலகக் குறிப்பு: 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1157**

5. இந்நகராட்சியில், அனைத்து பிரிவுகளிலும் பயன்படுத்தப்பட்டு வரும் கணிணி / லேசர் பிரிண்டர்/ ஜெராக்ஸ் மெசின் ஆகியவற்றிற்கான உபகரணங்கள் Tonner Refill New Tonner Purchase ஆகியவற்றை 2025−2026 ஆம் ஆண்டிற்கு தேவைப்படும்பொழுது வாங்க வேண்டியுள்ளது. (கணிணி − 25, Laser Printer 15, Xerox Machine − 2)

மேற்படி, உபகரணங்கள் Tonner Refill, New Tonner Purchase ஆகியவற்றிற்காக ஆகும் உத்தேச செலவினம் ஒரு ஆண்டிற்கு ரூ.5,00,000/− (ரூபாய், ஐந்து இலட்சம் மட்டும்) ஆகும். மேற்படி செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 550/2025/டி2)

**அலுலவக குறிப்பு:− 1.** மன்றம் அனுமதி அளிக்கலாம்

2. பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

**அலுவலகக் குறிப்பு: 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1158**

6. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் புதியதாக இயங்கி வரும் நூலகம் மற்றும் அறிவுசார்மையத்திற்கு தேவையான தினசரி நாளிதழ்களான டைம்ஸ் ஆப் இந்தியா ஆங்கில தினசரி இதழ்கள் தமிழ்இந்து மற்றும் வார இதழ் மாத இதழ்கள் வாங்க வேண்டியுள்ளது. மேற்படி இதழ்களுக்கன (COMPETITION SUCCESS, KURUKSHETRA YOJANA. திட்டம், EMPLOYMENT NEWS & ETC) ஆண்டு சந்தா ஆகும் உத்தேசசெலவினம் ரூ.25,000/− ஆகும். மேற்படி இதழ்கள் விநியோகம் செய்யவும் அதற்கான செலவினத்தை நகராட்சி கல்வி நிதியில் வைக்கப்படுகிறது. இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண். 1438/2024/பி3)

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி செலவினத்தினை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**அலுவலகக் குறிப்பு: 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1159**

7. இந்நகராட்சி அலுவலக தொடர்பான தொலைபேசி கட்டணங்கள் இணையதள வசதிக்கான கட்டணங்கள் தொடர்பான செலவினம் மேற்க்கொள்ள 2025−2026 ஆம் ஆண்டிற்க்கு உத்தேச மதிப்பாக ரூ.5,00,000/− இலட்சத்திற்கு செலவினம் நகராட்சி குடிநீர் நிதியில் இருந்துமேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி செலவினத்தினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**அலுவலகக் குறிப்பு: 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1160**

8. இந்நகராட்சியின் 2021 − 2024 வரை திட்டப்பணிகள் மேற்கொண்டமைக்கு பணிகளின் சுருக்கம் தினத்தந்தி தொழில் மலர் செய்திதாளில் 11.10.2024ல் வெளியிடப்பட்டது. இச்செய்தியினை தினத்தந்தி தொழில் மலர் செய்திதாளில் வெளியிடப்பட்டமைக்கு செலவின தொகை ரூ.15,000/− க்கு பட்டியல் பெறப்பட்டுள்ளது. அத்தொகையினை Dailly Thanthi அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2. மேற்காண் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**அலுவலகக் குறிப்பு: 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1161**

9. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளில் உள்ள 2025–2026 முதலாம் அரையாண்டுக்கு சொத்துவரி, காலியிட வரி, தொழில் வரி மற்றும் குடிநீர் கட்டணங்கள் கேட்பு அறிவுப்புகள் (Demand Notice) 25,903 பக்கங்கள் A4 தாள்களில் பிரிண்டிங் எடுத்து தரவும், 2024–2025 ஆம் ஆண்டுக்கான சொத்து வரி, காலியிட வரி மற்றும் தொழில் வரி ஆகிய இனங்களுக்கு நிலுவை மற்றும் நடப்பாண்டுக்கான கேட்பு வசூல் நிலுவை பதிவேடுகள் (Demand Register) 4,787 பக்கங்கள் Legal தாள்களில் பிரிண்டிங் எடுத்து வார்டு வாரியாக தனிதனியாக 60 புக்பைண்டிங் செய்து தரவும்,
இப்பணியினை மேற்கொள்ள உள்ளூர் நிறுவனங்களில் 03.04.2025–ம் தேதி அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டது, அதன் அடிப்படையில் 11.04.2025–ம் தேதி பிற்பகல் 3.00 மணி வரை விலைப்புள்ளிகள் வரப்பட்டது, அதன் விவரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது,

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | மொத்த தொகை |
|---|---|---|
| 1 | LK டிசைனர்ஸ் சௌந்தரபாண்டியன் வீதி, வண்டிப்பேட்டை ,கோபி. | **ரூ. 56,055/–** |
| 2 | மைக்ரோ கம்ப்யூட்டர்ஸ்<br>V P மெயின் ரோடு, அண்ணா பாலம், கோபி. | **ரூ. 59,940/–** |
| 3 | ஸ்டார் பிரிண்ட மற்றும் ஸ்டேஷனரி<br>59, SDN காலனி, பஸ் நிலையம் பின்புறம், கோபி. | **ரூ. 53,227/–** |

மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் 3–ல் குறிப்பிட்டுள்ள ஸ்டார் பிரிண்ட மற்றும் ஸ்டேஷனரி, 59, SDN காலனி, பஸ் நிலையம் பின்புறம், கோபிசெட்டிபாளையம். என்ற நிறுவனத்தின் விலைவிகிதமானது மற்ற இரண்டையும் விட குறைவாக உள்ளது. எனவே அதனை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு: 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1162**

10. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வாரசந்தையில் உள்ள கழிப்பிடத்தின் கழிவு நீர் முறையாக வெளியே செல்லாததால் கழிவுநீர் தேங்கி நோய் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளது. இதனால் இக்கழிப்பிடத்தில் உள்ள கழிவுநீரை அகற்றி புதிய Manhole – கள் கட்ட வேண்டியுள்ளது. இதற்கு ரூ.1.50 இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அத்தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்காண் தொகை ரூ.1.50/–இலட்சத்தினை பொது நிதியில் இருந்து செலவின செய்யவும். அத்தொகையினை வாரசந்தை பணிகள் மேற்கொண்ட ஒப்பந்ததாரரிடம் பட்டியல் தொகையில் இருந்து பிடித்தம் செய்து ஈடு கட்டவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு: 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1163**

11. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட கடை குத்தகைதாரர்களுக்கு கீழ்கண்ட கலம் எண் 5 ல் கண்டுள்ள தேதிகளிலிருந்து மூன்றாண்டு காலத்திற்கு கலம் எண் 3 உள்ள கடைகளை குத்தகைக்கு

வழுங்கப்பட்டிருந்தது, ஆனால் கலம் எண் 2 ல் கண்டுள்ள குத்தகைதாரர்கள் தங்களால் கடையினை தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தாலும் வ,எண் 10 உள்ள குத்தகைதாரர் கடை பழுதடைந்த காரணத்தாலும் 31.03.2025 உடன் நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதாக தெரிவித்துள்ளனர்

| வ. எ ண் | குத்தகைதாரர் பெயர் | கடையின் விபரம் மற்றும் வரி விதிப்பு எண் | குத்தகை தாரர்கள் விண்ணப்ப நாள் | குத்தகைக்கு விடப்பட்ட நாள் | நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்த நாள் | வருவாய் ஆய்வாளரால் நகராட்சி வசம் ஏற்றுக்கொள் ளப் பட்ட நாள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | ஆனந்தகுமார் | MUDF பழைய பேருந்து நிலையம் கடை எண் 20 057/836 | 26.03.2025 | 05.07.2022 முதல் 04,07,2025 வரை | 31.03.2025 | 01.04.2025 |
| 2 | எம், மலைச்சாமி | MUDF பழைய பேருந்து நிலையம் கடை எண் 37 057/853 | 10.03.2025 | 01.08.2024 முதல் 31.03.2027 வரை | 31.03.2025 | 01.04.2025 |
| 3 | நாகேந்திரன் | MUDF பழைய பேருந்து நிலையம் கடை எண் 40 057/856 | 26.03.2025 | 01.10.2024 முதல் 30.09.2027 வரை | 31.03.2025 | 01.04.2025 |
| 4 | நாகேந்திரன் | MUDF பழைய பேருந்து நிலையம் கடை எண் 41 057/857 | 26.03.2025 | 01.10.2024 முதல் 30.09.2027 வரை | 31.03.2025 | 01.04.2025 |
| 5 | கே,எஸ்.மூர்த்தி | MUDF பழைய பேருந்து நிலையம் கடை எண் 68 057/884 | 24.03.2025 | 01.04.2023 முதல் 31.03.2026 வரை | 31.03.2025 | 01.04.2025 |
| 6 | எம்.ஹபீப் முகமது | TNUDF புதிய பேருந்து நிலையம் கடை எண் 3 057/953 | 01.04.2025 | 01.04.2024 முதல் 31.03.2027 வரை | 31.03.2025 | 01.04.2025 |
| 7 | பி. சண்முகசுந்தர ம் | TNUDF புதிய பேருந்து நிலையம் கடை எண் 12 057/962 | 01.04.2025 | 01.04.2023 முதல் 31.03.2026 வரை | 31.03.2025 | 01.04.2025 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8 | பி.சண்முக சுந்தரம் | TNUDF புதிய பேருந்து நிலையம் கடை எண் 13 057/963 | 01.04.2025 | 01.04.2023 முதல் 31.03.2026 வரை | 31.03.2025 | 01.04.2025 |
| 9 | அ. அசாருதீன் | வாய்க்கால் வீதி QUARTERS பின்புறம் கடை எண் 3 057/167 | 01.04.2025 | 01.04.2024 முதல் 31.03.2027 வரை | 31.03.2025 | 01.04.2025 |
| 10 | குமார் | புதிய ஆஸ்பத்திரி வீதி கடை எண் 6 057/BD01/00045 | 19.03.2025 | 01.02.2024 முதல் 31.01.2027 வரை | 19.03.2025 | 01.04.2025 |

மேலும் உதவி வருவாய் அலுவலர் அவர்கள் தனது 01.04.2025 ம் தேதிய குறிப்பில், மேற்படி குத்தகைதாரர்கள் கடையினை தொடர்ந்து நடத்த இயலாததால் மேற்படி கடையினை 31.03.2025 முதல் நகராட்சி வசம் எடுத்துக்கொண்டு நகர்மன்றத்தின் ஒப்புதல் பெற்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம் என தெரிவித்துள்ளார்,

எனவே உதவி வருவாய் அலுவலர் அவர்களின் குறிப்பின்படி கலம் எண் 3 ல் கண்டுள்ள கடைகளுக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தினை 31.03.2025 ஆம் தேதியுடன் ரத்து செய்யவும், 01.04.2025 ஆம் தேதி முதல் மேற்படி கடைக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான ஏல அறிக்கையினை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண். 3060/2016/அ3

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1164**

12. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 19 குப்பாண்டவர் வீதியில் உள்ள சிறுபாலங்கள் முற்றிலும் பழுதுடைந்துள்ளது. இதனால் வாகன ஓட்டிகள் அச்சாலையினை கடக்க முடியாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். மேலும் சிறுவர்கள் மற்றும் முதியவர்கள் இச்சாலையினை கடக்க மிகவும் சிரமப்படுகின்றனர். இதனால் இப்பகுதிகள் பழுதடைந்த சிறுபாலங்களை சீரமைக்க ரூ.3.00 இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே அத்தொகையினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** 1 . மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்காண் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**அலுவலகக் குறிப்பு: 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1165**

13. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட நகராட்சி அலுவலகத்தில் இயங்கி வரும் பொறியியல் பிரிவிற்கு அதிக அளவில் திருப்பூர் மண்டல அலுவலகம் மற்றும் சென்னை தலைமை அலுவலகத்திற்கு சென்று கோப்புகள் மற்றும் பணிகள் தொடர்பான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க வேண்டியுள்ளது. இதற்கு மடி கணினி மற்றும் பிரிண்டர்கள் தேவைப்படுகிறது. இதற்கு தோராய மதிப்பீடு ரூ.1.50 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே அத்தொகையினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்காண் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**அலுவலகக் குறிப்பு: 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1166**

14. 2025–2026 ஆம் ஆண்டில் இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் பராமரிக்கப்படும் வாகனங்களுக்கு இதர செலவினம், இன்சூரன்ஸ் மற்றும் பராமரிப்புக்கு உத்தேச செலவின தொகை ரூ.5.00 இலட்சம் ஆகும். மேற்காண் செலவின தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்காண் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**அலுவலகக் குறிப்பு: 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1167**

15. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குள் உள்ள சிவசண்முகம் வீதி (வார்டு 26) ஆண்கள் கழிப்பிடம், நேரு வீதி (வார்டு 18) பொதுக்கழிப்பிடம் மற்றும் சிறுமின் விசைபம்பு LIG காலனி (வார்டு 8) சிறுமின் விசைபம்பு ஆகிய இடங்களில் உள்ள HDPE Tank அமைக்கப்பட வேண்டும். மேலும் சக்தி நகர் (வார்டு 10) சிறுமின் விசைபம்பு தொட்டி மற்றும் மீட்டர் அறை மாற்றி அமைக்க வேண்டியுள்ளது.மேற்படி பணிக்கு ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.2,00,000/–ஆகும் மேற்காண் செலவின தொகையினை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்காண் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்

**அலுவலகக் குறிப்பு: 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1168**

16. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான கரட்டூர் குப்பைக்கிடங்கில் உள்ள குப்பைகளை பயோமைனிங் முறையில் அப்புறப்படுத்தும் பணிக்கு, மூன்றாம் தர பரிசோதனை மேற்கொண்டு குப்பைகளை அளவீடு மேற்கொள்ள Centre for Environmental Studies Anna Univercity Chennai அவர்களை Project Management Consultancy (PMC) ஆக நியமித்தலின் அடிப்படையில் அதற்கு Countation கட்டணமாக ரூ.1,77,000/–யினை செலுத்த வேண்டியுள்ளது. அச்செலவின தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்காண் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம

**அலுவலகக் குறிப்பு: 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1169**

17. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான தினசரி பூ அங்காடி 1800 சதுர மீட்டர் பரப்பளவில் பிளாக் C/9 T.S No.252 யில் 1960 ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும். ஏறத்தாழ 65 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதால், மிகவும் பழுதடைந்து பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது. மேற்படி கட்டிடத்தினை இடித்து விட்டு புதியதாக கட்டிடம் கட்ட (Reanovation) செய்ய சட்டமன்ற மானிய கோரிக்கையின் பொழுது அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனால் பூ அங்காடிக்கு Renovation மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. இதற்கு தொழில்நுட்ப ஆலோசர்களை கொண்டு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய மதிப்பீட்டு தொகையில் இருந்து 2% செலுத்தி மேல் நடவடிக்கை தொடருவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்காண் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகையில்

2% செலுத்துவதற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு: 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1170**

18. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2023-2024 ம் ஆண்டிற்கான வருவாய் நிதி குடிநீர் நிதி, மற்றும் கல்விநிதிக்கான தணிக்கை முடிவுற்று 01.04.2025ம், தேதியன்று அறிக்கை பெறப்பட்டது மேற்படி தணிக்கை அறிக்கையை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

**அலுவலகக் குறிப்பு: பதிவு செய்யப்பட்டது. தீர்மான எண். 1171**

19. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2023 - 2024 ம் ஆண்டு உள்ளாட்சி நிதி தணிக்கை செய்தமைக்கான தணிக்கை கட்டணம் ரூ.2,26,716/- ஐ உரிய அரசு தலைப்பு கணக்கில் (DPC-0070-60-110-AA-2769) செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு** : 1. அனுமதி வழங்கலாம்,

2. செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்

**அலுவலகக் குறிப்பு: 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1172**

20. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட 6 கழிப்பிடங்கள் மிகவும் மோசமாக இருப்பதால் அதனை இடிக்க வேண்டியுள்ளது. அதனை இடித்து அப்புறப்படுத்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

கழிப்பிடங்கள் அமைந்துள்ள இடத்தின் விவரம்

| | |
|---|---|
| வார்டு எண்13 | புதுச்சாமி கோவில் வீதி |
| வார்டு எண் 26 | சிவசண்முகம் வீதி-3 |
| வார்டு எண் 30 | செங்கோட்டையன் காலனி (நம்ம டாய்லெட்) |
| வார்டு எண் 5 | மாதேசியப்பன் கோவில் வீதி |
| வார்டு எண் 19 | கோகுலம் கார்டன் |
| வார்டு எண் 28 | சுப்பிரமணியன் வீதி |

**அலுவலகக்குறிப்பு :** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1173**

21. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குள் வார்டு எண் 23இல் சிலேட்ட ஹவுஸ் வீதியில் உள்ள சமுதாய கூடத்திற்கு தண்ணீர் வசதி செய்யும் பொருட்டு நஞ்சப்பா வீதியில் உள்ள சிறுமின் விசைப்பம்பு ஆழ்துறை கிணற்றிலிருந்து குழாய் மற்றும் HDFC Tank அமைத்து தண்ணீர் வசதி செய்ய மதிப்பீட்டு தொகை ரூ.35,000/-ஆகும். எனவே, அச்செலவின தொகையினை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்

2. மேற்காண் செலவின தொகை ரூ.35,000/-த்தினை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக் குறிப்பு: 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1174**

22. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 13இல் தினசரி சந்தை கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் தளத்தில் வாகனம் நிறுத்துமிடம் உள்ளது. இப்பகுதிக்கு வாகனங்கள் செல்ல சாலையில் இருந்து சரிவுப்பாதை (Ramp) அமைக்க உத்தேச மதிப்பீட்டு செலவினம் தொகை ரூ.32.00 இலட்சம் ஆகும். எனவே, அச்செலவின தொகையினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2. மேற்காண் செலவின தொகை ரூ.32.00 இலட்சத்தினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு: 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1175**

23. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான காலியாக உள்ள கடைகளுக்கு 14.03.2025 அன்று பொது (ம) மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் நடைபெற்றது, மேற்படி கடைகளுக்கு நடைபெற்ற பொது (ம) மறு ஏலத்தில் கலந்து கொள்ள யாரும் முன்வரவில்லை, இரண்டு கடைகளுக்கு மட்டும் தலா இரண்டு நபர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டனர். அதன் விபரம் பின்வருமாறு

| வ.எண். | கடையின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி/ ஏலத்தில் கலந்து கொண்டவர் விபரம் | ஏலத் தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | வாரசந்தை கடை எண்24 | திருமதி. மகாதேவம்மா<br>க/பெ மணிகண்டன்<br>வேட்டைகாரன் கோவில்<br>திருப்பூர் ரோடு<br>கோபிசெட்டிபாளையம் | – | **ரூ.5150/–** |
| | | திரு.சந்திரன்<br>த/பெ மாரியப்பன்<br>நெடுஞ்செழியன் வீதி<br>நட்டுவன காடு<br>சிறுவலூர் | – | **ரூ.5200/–** |
| 2 | வாரசந்தை கடை எண்25 | திரு.என். சங்கர்<br>2, பெரியார் நகர்<br>பெரிய மொடச்சூர்<br>கோபிசெட்டிபாளையம்<br>9788002363 | – | **ரூ.5150/–** |
| | | திரு.சுந்தரேஸ்வரன்<br>96 பெரியண்ணன் வீதி<br>பெரிய மொடச்சூர்<br>கோபிசெட்டிபாளையம் | – | **ரூ.5250/–** |

மேற்கண்ட விபரங்களின்படி

வரிசை எண் 1 ல் கண்டுள்ள வாரசந்தை கடை எண் 24 ற்கு திருமதி. மகாதேவம்மா என்பவர் கோரியுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ,5150/– விட கூடுதலாக ரூ 50/– சேர்த்து திரு, சந்திரன் என்பவர் ரூ,5200/– க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

வரிசை எண் 2 ல் கண்டுள்ள வாரசந்தை கடை எண் 25 ற்கு திரு.என். சங்கர் என்பவர் கோரியுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ,5150/– விட கூடுதலாக ரூ 100/– சேர்த்து திரு. சுந்தரேஸ்வரன் என்பவர் ரூ,5250/– க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்

வருவாய் ஆய்வர் அவர்கள் தனது 15.03.2025 ஆம் தேதிய குறிப்பில், வாரசந்தை கடை எண் 24 மற்றும் 25 கொண்ட கடைக்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.5,200/– மற்றும் ரூ.5,250/– கோரியுள்ள திரு, சந்திரன் மற்றும் திரு, சுந்தரேஸ்வரன் என்பவருக்கு மன்றத்தின் அனுமதி பெற்றும் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கலாம் என தெரிவித்துள்ளார்.

எனவே வருவாய் ஆய்வர் அவர்கள் குறிப்பின்படி, வாரசந்தை கடை எண் 24 கொண்ட கடைக்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.5200/– கோரியுள்ள திரு, சந்திரன் என்பவருக்கும் வாரசந்தை கடை எண் 25 கொண்ட கடைக்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.5250/– கோரியுள்ள திரு, சுந்தரேஸ்வரன் என்பவருக்கும் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கவும், ஏலம்

போகாத மீதமுள்ள கடைகளுக்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1567/2018/அ3)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1176**

24. இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும் பொது சுகாதாரப் பணிகளுக்கு கீழ்காணும் விபரப்படி பொருட்கள் தேவைப்படுகிறது.

| வ.எண் | தேவைப்படும் பொருட்களின் விபரம் | தேவைப்படும் பொருட்களின் அளவு |
|---|---|---|
| 1 | மழை கோட் (Rain Coat) | 55 எண்ணிக்கை |
| 2 | Lemon Grass Oil – Grade – II | 50 லிட்டர் |
| 3 | Bacto Power – BTI Liquid (Bio Larvicide Insectitcide) | 50 லிட்டர் |
| 4 | கபரசுக் குடிநீர் பவுடர் | 25 கிலோ |
| 5 | EM –1 Enviro Pro Solution ( என்விரோ புரோ சொல்யூசன் ) | 70 லிட்டர் |

மேற்படி பொருட்களை அரசு கூட்டுறவு நிறுவனமான M/s. Tamil nadu Multipurpose indco service, 25A Sundaradas Kula Street, Thiruchirappalli – 620 008 நிறுவனத்தினரிடம் அந்நிறுவனத்தினரின் விலை விகிதமான Rain Coat 1 க்கு ரூ. 945/– ( வரிகள் உட்பட ) , Lemon Grass Oil Grade –II லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1947/– ( வரிகள் உட்பட ) , Bacto Power லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1652/– ( வரிகள் உட்பட), கபரசுக் குடிநீர் பவுடர் 1 கிலோவிற்கு ரூ. 1422/– ( வரிகள் உட்பட), EM –1 Enviro Pro Solution லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1091/– ( வரிகள் உட்பட), என்னும் விலைவிகிதத்தில் நேரடியாக கொள்முதல் செய்து பணி மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினம் ரூ.3,43,900 /– ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண். 802 / 2025/எச்1

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக் குறிப்பு: 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1177**

25. இந்நகராட்சி பகுதியில் உள்ள 30 வார்டுகளில் தினமும் சேகரமாகும் பிளாஸ்டிக் மற்றும் எரியும் தன்மையுடைய கழிவுகள் (சிமெண்ட் ஆலைகளின் மாற்று எரிபொருள் பயன்பாட்டிற்கு உகந்த) அனைத்தும் இந்நகராட்சியின் RRC மையங்களில் சேமித்து வைத்து அக்கழிவுகள் அவ்வப்போது தேக்கமின்றி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016 –ன் படி சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்ப வேண்டி உள்ளது. எனவே லாரிகளை வாடகைக்கு விநியோகம் செய்யும் ஒப்பந்ததாரர் மூலம் இப்பணியினை 01.05.2025 முதல் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00/– இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. **ந.க.எண்.799/2024/எச்1**

**அலுவலக குறிப்பு :**1. மன்றம் அனுமதிக்கலாம்

2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுசுகாதார பிரிவினரால் திடக்கழிவு மற்றும் பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016 –ன் படி வசூலிக்கப்படும் அபராத கட்டணங்களின் தொகை அல்லது திடக்கழிவு பயனீட்டாளர் கட்டணத்திலிருந்து (Solid Waste Management User Charge) செலவு செய்து கொள்ளவும். அத்தொகையில் இருப்பு இல்லாத நேர்வில் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு: 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1178**

26. இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளான பொதுமக்களுக்கு சுகாதாரம் சம்பந்தமான விழிப்புணர்வு, நோய் தடுப்பு

முறைகள் குறித்த பணிகள், மரக்கன்று நடும் பணிகள், திடக்கழிவு மேலாண்மை, தூய்மை இந்தியா திட்டம், SBM – 2.O தூய்மை நகரங்களுக்கான மக்கள் இயக்கம் மற்றும் இதர நகராட்சி செயல்பாடுகள் குறித்த விளம்பர பதாகைகள் (Flex Boards) 01.05.2025 ஆம் தேதி முதல் அவ்வப்போது தயார் செய்து கொள்ள உள்ளூர் நிறுவனமான M/S STROKE DIGITAL, 5 முத்துஷா வீதி, கோபிசெட்டிபாளையம் அவர்களிடம் தயார் செய்யப்பட்டு அவ்வப்போது பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 1.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. **ந.க.எண்: 648/2025/எச்1**

**அலுவலகக்குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. இதற்காக செலவினத்தை பொது நிதியில் இருந்து வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**அலுவலகக் குறிப்பு: 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1179**

27. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் உள்ள 30 வார்டுகளிலும் கொசுக்களினால் பரவும் டெங்கு காய்ச்சல் உள்ளிட்ட தொற்று நோய்களை கட்டுப்படுத்திட அபேட் மருந்து தெளித்தல், கொசுப்புழுக்களை அழித்தல், நோய் பரவும் விதம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் புகை மருந்து தெளித்தல் போன்ற பணிகளுக்கு ஒப்பந்த முறையில் வெளிப்பணி ஒப்படைப்பு முறை (Out Sourcing Basis) மூலம் 37 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை ஒப்பந்ததாரரிடம் எதிர் வரும் 2025–2026 ஆம் ஆண்டில் இப்பணியினை மேற்கொள்ள ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.5816/2024/(எ–2) நாள்.10.07.2024 இன்படி தினக்கூலி/பகுதி நேர பணியாளர்கள் போன்றவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஊதிய விகிதம் பட்டியலில் Part time Menials paid from contingencies (Per hour/ Sweeper ரூ.80/– Per hour நிர்ணயிக்கப்பட்ட ஊதிய விகிதத்தின் படி 8 மாதங்களுக்கு ஆகும் செலவினம் ரூ.45.16/– இலட்சம் என மதிப்பிடப்படுகிறது.

எனவே திறந்தவெளி ஒப்பந்த அழைப்பு விடுத்து தகுதியான தனியார் சேவை வழங்குநரை தேர்வு செய்து பணி மேற்கொள்ளவும். அதற்காகும் செலவினம் ரூ.45.16/– இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. **ந.க.எண். 798 /2025/எச்1**

**அலுவலக குறிப்பு**: 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக் குறிப்பு: 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1180**

28. இந்நகராட்சி பகுதிகளில் வாழும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் கிறிஸ்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் ஆகிய இனத்தவர்கள் இறந்தால் இறந்தவரின் குடும்பத்தினருக்கு ஈமச்சடங்கிற்கு வழங்கப்படும் தொகை தலா ரூ.5000/–ம் வழங்கிட அரசு ஆணை நிலை எண்.105 நாள். 19.10.2020 இல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தொகையினை 2025–2026 ஆம் நிதியாண்டில் தகுதியானவர்களுக்கு வழங்கவும் அதற்காகும் செலவினம் ரூ.2.50/– இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **ந.க.எண்.2749/2020/எச்1**

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2 ஈமச்சடங்கு தொகையினை பொதுநிதியிலிருந்து விடுவித்த பின்பு மானியம் வரப்பெற்றவுடன் சரிகட்டி கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக் குறிப்பு: 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1181**

29 . இந்நகராட்சி பகுதியில் நகராட்சியின் பராமரிப்பில் 3 துவக்கப்பள்ளிகளும் 2 நடுநிலைப் பள்ளிகளும், 1 உயர் நிலைப்பள்ளியும், 3 அரசு மேல்நிலைப்பள்ளிகளும் இயங்கி வருகின்றன. மொத்தம் உள்ள 9 பள்ளிகளிலும் உள்ள கழிப்பறைகளின் பராமரிப்பு மற்றும் பள்ளி வளாக தூய்மைப் பணிகளை எதிர்வரும் 2025 – 2026 ஆம் கல்வி ஆண்டிலும் தொடர்ந்து தூய்மைப் பணியினை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. எனவே, 19 தூய்மைப்பணியாளர்களை (1 மேற்பார்வையாளர் உட்பட ) விநியோகிக்க ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் சேவை வழங்குநரிடமிருந்து (Private Service Provider) தூய்மை

பணியாளர்களை பெற்று 230 பள்ளி வேலை நாட்களில் பணி மேற்கொள்ள ரூ. 34.00 இலட்சம் செலவினம் ஆகும் என கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே திறந்த வெளி ஒப்பந்த அழைப்பு விடுத்து தகுதியான தனியார் சேவை வழங்குநரை தேர்வு செய்து பணி மேற்கொள்ளவும், அதற்காகும் செலவினம் ரூ. 34.00/– இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. **ந.க.எண். 800 / 2025 /எச்1**

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. இதற்கான செலவினத்தை கல்வி நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக் குறிப்பு: 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1182**

30. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் உள்ள 30 வார்டு பகுதிகளிலும் டெங்கு மற்றும் கொசுக்களால் பரவும் நோய்களை கட்டுப்படுத்தும் பணிக்கு உபயோகப்படுத்தப்படும் புகை தெளிக்கும் இயந்திரத்தில் பழுதுகள் ஏற்பட்டதால் நோய் தடுப்பு பணியின் அவசியம் கருதி பழுதுகள் செப்பனிடும் பணியில் அனுபவம் பெற்ற M/s. Growin Enterprises, 020/1, E.V.K. Smapath Salai, Erode நிறுவனத்தினரிடம் பழுதுகள் சரிசெய்த வகையில் மொத்தம் ரூ. 8380/– செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்செலவினம் இந்நகராட்சி களப்பணி உதவியாளர் திரு. R. ரமேஷ்குமார் அவர்களால் செலவிடப்பட்டு அதற்கான செலவின ரசீதுகள் சமர்ப்பித்துள்ளதால் அவருக்கு அத்தொகையினை திரும்ப வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (**ந.க.எண். 801 /2025/எச்1)**

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக் குறிப்பு: 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1183**

31. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள நகராட்சி பள்ளிகளில் முதலமைச்சர் காலை உணவுத்திட்டத்தில் பள்ளிகளின் மாணவ மாணவியர்களுக்கு Raja Shri Anbu Bhavan Bus, Stand Near, Gobichettipalayam ஒப்பந்ததாரர் மூலம் உணவு தயார் செய்து வழங்கப்பட்டு வருகிறது. மேற்குறிப்பிட்ட ஒப்பந்ததாரரின் ஒப்பந்தகாலம் எதிர்வரும் 31.03.2025 ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் முதலமைச்சர் காலை உணவுத்திட்டத்தில் நகராட்சி பள்ளிகளில் மாணவ மாணவியர்களுக்கு உணவு வழங்கும் பணி எந்தவிதமான தொய்வுமின்றி தொடர்ந்து நடைபெற வேண்டியது அவசியம் என்பதால் இப்பணியின் ஒப்பந்தக்காலத்தினை 01.04.2025 முதல் 31.07.2025 ஆம் தேதி வரை மூன்று மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்து கொள்ளவும், அதற்காகும் செலவினம் ரூ.3.50/– இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. **ந.க.எண். 1088/2023/எச் 1**

**அலுவலக குறிப்பு** : 1. 01.04.2025 முதல் உணவு தயார் செய்து வழங்குவதை மன்றம் அனுமதிக்கலாம்.

2. இதற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக் குறிப்பு: 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1184**

**32.** இந்நகராட்சி பகுதியில் சுற்றித்திரியும் தெரு நாய்களை AWB of Inida நிறுவனத்தினரால் அங்கீகரிக்கப்பட்ட ஏஜென்சீஸ் மூலம் பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்து ரேபிஸ் தடுப்பூசி போட்டு நாய்களின் இனப்பெருக்கத்தினை கட்டுப்படுத்தும் பணிக்கு தேவையான மருத்துவ உபகரணங்களான Auto Clave – 1 No, Sterilizer – 1 No, Artery tissue 6 "– 50 No's, Scissors calved 6 " – 10 No's, Needle holder 6 " – 10 No's, Thumb forceps 6 " – 10 No's, IV Stand – 1 No, Shadow less Lamb – 1 No உள்ளிட்ட இதர மருத்துவ உபகரணங்கள் கொள்முதல் செய்து பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ. 4.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. **ந.க.எண். 2177 /2023/எச்1**

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

3. பாரத் சர்ஜிக்கல்ஸ், திருச்சி அவர்களிடம் கொள்முதல் செய்து கொள்ள அனுமதிக்கலாம்

**அலுவலகக் குறிப்பு: 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1185**

**33** பொதுசுகாதாரப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளான வாகனங்கள் பராமரித்தல், ஸ்டேஷனரி பொருட்கள் கொள்முதல், மூன்று நுண் உரமாக்கல் மையங்கள் பராமரித்தல், 2 வளமீட்பு மையங்கள் பராமரித்தல் உள்ளிட்ட இதர பொதுசுகாதார பிரிவு மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு அவ்வப்போது தேவைப்படும் பராமரிப்பு செலவினம், பொருட்கள் கொள்முதல் மற்றும் எதிர்பாராத இதர செலவினங்கள் அவசர அவசியம் கருதி அவ்வப்போது திடிரென மேற்கொள்ள வேண்டி உள்ளது. இதற்கு 2025 – 2026 ஆம் நிதி ஆண்டிற்கு ரூ. 5.00 இலட்சம் ஆகும் என மதிப்பிடப்படுகிறது. இச்செலவினத்தினை Contingent Expenditure செலவின வகைப்பாட்டில் செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது. **ந.க.எண். 753 /2025/எச்1**

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக் குறிப்பு: 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1186**

34. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வீரபாண்டி கிராமம் வார்டு– D, பிளாக்–20 நகரளவை எண்.9/1,9/3,10/1,10/3,24/1,24/3,25/1,25/3, (பழைய க.ச.எண்.244/A,Bpt, 245/1pt) இன் 1.95 ஏக்கர் மனையிடத்தில் ஒப்புதலளிக்கப்பட்ட கோபிசெட்டிபாளையம் விரிவு அபிவிருத்தி திட்ட எண்.7இல் விவசாய உபயோகத்திலிருந்து குடியிருப்பு உபயோக பகுதியாக நிலப் பயன்பாடு மாற்றம் செய்து தருமாறு மனுதாரர்களான திரு. V.R.R.சென்னியன்கிரி மற்றும் திரு.T.பழனிசாமி ஆகியோரால் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களுக்கு இணைய தள விண்ணப்ப எண்.B9FZZAXB/2024 நாள்.14.02.2024 இல் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் விண்ணப்பத்தினை தொடர்ந்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.658/2024–ஈமா2 (இணைய தள எண். B9FZZAXB/2024) நாள்.05.03.2024 இல் மேற்படி இடத்தினை ஒப்புதல் அளிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.7இல் விவசாய உபயோகத்திலிருந்து குடியிருப்பு பகுதியாக நிலப் பயன் மாற்றம் செய்ய பொது மக்களின் ஆட்சேபனை மற்றும் ஆலோசனை பெறுதல் தொடர்பான அறிவிப்பினை ஏதேனும் தினசரி தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் விளம்பரம் செய்து அதன் பின்னர் நகர் மன்ற தீர்மானம் பெற்று அனுப்பி வைக்குமாறு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களால் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேற்படி இடத்தினை ஆய்வு செய்யப்பட்டது. நகர சார் ஆய்வாளர் குறிப்பின்படி மேற்படி இடமானது திரு.சென்னியன்கிரி த/பெ.ராமசாமி, மற்றும் பழனிசாமி த/பெ.தங்கமுத்துகவுண்டர் ஆகியோருக்கு பாத்தியப்பட்ட இடமாகும் இப்பகுதியில் நீர் வழி தடம் மற்றும் கொப்பு ஏதும் இல்லை இதில் பயிர் ஏதும் பயிரிடப்படாத தரிசு நிலமாகும் இந் நிலத்தின் மேற்கில் அணுகு பாதையாக பஞ்சாயத்து தார் சாலையாக உள்ளது கிழக்கு மற்றும் வடக்கில் தனியாருக்கு சொந்தமான தென்னந் தோப்பு உள்ளது. தெற்கில் தரிசு நிலமாக உள்ளது இதன் அருகில் பச்சமலை முருகன் கோவில் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் வீடுகள் மற்றும் தோட்டம் உள்ளது. மேற்படி பூமியிலிருந்து 200மீட்டர் தொலைவிற்குள் சுடுகாடு, மின்மாயனம் போன்ற இனங்கள் ஏதும் இல்லை. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களால் கோரியதற்கிணங்க கோபிசெட்டிபாளையம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.7இல் மனுதாரர் மனையிடத்தை விவசாய உபயோகத்திலிருந்து குடியிருப்பு உபயோக பகுதியாக நிலப்பயன் மாற்றம் செய்ய பொது மக்களின் ஆலோசனை மற்றும் ஆட்சேபனை கோரி பொது மக்களுக்கு தெரியும் வகையில் 11.06.2024 அன்று தினகரன் தமிழ் தினசரி

நாளிதழிலும் மற்றும் TRINITY MIRROR என்ற ஆங்கில தினசரி நாளிதழிலும் விளம்பரம் செய்யப்பட்டது

இதனை தொடர்ந்து 10.07.2024 உடன் பொது மக்களின் ஆலோசனை மற்றும் ஆட்சேபனை தெரிவிக்க கோரிய ஒரு மாத கால அவகாசம் முடிவடைந்தது. மேற்படி நில உபயோக மாற்றம் செய்வது தொடர்பாக பொதுமக்களிடமிருந்தோ, அமைப்புகளிடமிருந்தோ எவ்வித ஆலோசனை மற்றும் ஆட்சேபனைகள் ஏதும் வரப்பெறவில்லை. எனவே மேற்காணும் விவரப்படியான விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.7இல் விவசாய உபயோகத்திலிருந்து குடியிருப்பு உபயோக பகுதியாக நிலப்பயன்பாடு மாற்றம் செய்வதற்கான கருத்துருவை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களின் வழியாக நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களுக்கு நகர் மன்ற தீர்மான எண். 920, நாள்.30.07.2024இன் படி இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 447/2024/எப்1, நாள்.30.08.2024 இல் கருத்துரு அனுப்பப்பட்டது. இந்நிலையில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்கள் கடிதம் ந.க.எண். 658/2024/இமா 2, நாள்.20.01.2025 இல் தமிழ்நாடு அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளதை மறுபிரசுரம் செய்து தினசரி நாளிதழ் மற்றும் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்து உள்ளூர் திட்ட குழும தீர்மானம் பெற்று சமர்பிக்குமாறு கோரப்பட்டுள்ளதை தொடர்ந்து 19.02.2025 இல் தினசரி நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டது. அதனை தொடர்ந்து மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய கோரி 07.03.2025 இல் மாவட்ட ஆட்சித் தலைவர் ஈரோடு அவர்களால்அரசுக்கிளை சேலம் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு 28.03.,2025, இல் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து உள்ளூர் திட்ட குழு தீர்மானம் பெறுவது தொடர்பாக மேற்படி விவசாய நிலத்திலிருந்து குடியிருப்பு நில உபயோக மாற்றம் செய்ய உள்ளூர் திட்ட குழும தீர்மான அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 447/2024/F1)

**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1187**

35. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான வாரசந்தை உள்ள காலியிடத்தில் மீன் கடைகளுக்கு சுங்கம் வசூல் செய்யும் உரிமம் 11.04.2025 உடன் குத்தகை காலம் முடிவடைகிறது, மேற்படி குத்தகை இனத்திற்கு 30.01.2025 முதல் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் நாளது தேதி வரை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர ஒருவரும் முன்வர வில்லை, எனவே நிதியிழப்பை தவிற்கும் பொருட்டு மேற்படி குத்தகை இனத்திற்கான சுங்க கட்டணத்தை 12.04.2025 முதல் துறை ரீதியான வசூல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண். 2560/2023/அ3)

**அலுவலக குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்

**அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1188**

36. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையம் பி வகுப்பு அங்கீகாரம் முடிவடைவதால் அங்கீகாரம் புதுப்பிக்க உரிய கருத்துருக்கள் தயார் செய்து ஆணையாளர் அவர்களின் ஒப்புதலுடன் வட்டாரப்போக்குவரத்து அலுவலரிடம் சமர்ப்பித்து அனுமதி பெற வேண்டும். இதற்கு பேருந்து நிலையத்தில் பயணிகளுக்கு உரிய நாற்காலி மின் விளக்குகள், மாற்றுத்திறனாளிகளுக்கு சாய் தளம் மற்றும் இதர அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் இதற்கு ரூ.2 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே, அச்செலவின தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**: 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2. மேற்காண் செலவின தொகை ரூ.2.00/-இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு: 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1189**

37. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2024–2025 ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 28.02.2025 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. அதனை தொடர்ந்து கீழே குறிப்பிட்டுள்ளவாறு 12.03.2025 இல் வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | (SBM2.0) கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான கரட்டூர் உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை பயோமைனிங் முறையில் அப்புறப்படுத்தும் பணி | 15,00,000 | Global Icon, Avalpoondurai Contractor | 0.01% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | Fineline Renewables Erode Contractor | 1.27% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு: 1.** மன்றம் அனுமதிக்கலாம்.

**2.** மேற்படி பணிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.Global Icon அவர்களின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு: 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1190**

38. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 192/2025/ SBM –1 நாள் 18.03.2025ன்படி, அரசு மருத்துவமனைகளில் பொது சுகாதாரத்தினை மேம்படுத்த பொது கழிப்பிடங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள அரசு மருத்துவமனையில் புதியதாக கழிப்பிடங்கள் (Aspirational toilets) கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் அரசு பொது மருத்துவமனையில் புதியதாக 15 எண்ணிக்கைகள் கொண்ட கழிப்பிடங்கள் கட்ட கீழ்க்கண்டவாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| **மருத்துவமனையின் பெர்** | **மத்திய பங்களிப்பு (GoI Share) 50% In Laksh** | **மாநில பங்களிப்பு 33% In laksh** | **நகராட்சி பங்களிப்பு 17% In laksh** | **மொத்த மதிப்பீடு In laksh** |
|---|---|---|---|---|
| கோபிசெட்டிபாளையம் அரசு மருத்துவமனை | 10.50 | 6.93 | 3.57 | 21.00 |

இதனையடுத்து மேல் குறிப்பிட்டுள்ள ரூ.21.00 இலட்சம் மதிப்பீடு 15 எண்ணிக்கை கொண்ட பொது கழிப்பிடம் கட்ட நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இதற்கு நகராட்சி பங்களிப்பு தொகையான ரூ.3.57 இலட்சம் பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்

2. மேற்காண் ரூ.21.00 இலட்சம் மதிப்பீடு 15 எண்ணிக்கை கொண்ட பொது கழிப்பிடம்கட்ட மன்றம் நிர்வாகஅனுமதிஅளிக்கலாம்
3. நகராட்சி பங்களிப்பு தொகையான ரூ.3.57 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு: 1,2 மற்றும் 3அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1191**

39. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் வார்டு எண் 13ல் உள்ள தினசரி மார்க்கெட் புதியதாக கட்டப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இங்கு தினசரி வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் அதிக அளவில் கூடுவார்கள். அங்கு அவர்களுக்கு போதிய கழிப்பிட வசதி இல்லாமல் இருக்கிறது. இதனால் இருபக்கமும் ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலருக்கும் கழிப்பிடம் வசதி மற்றும் Septic tank பணிகள் மேற்கொள்ள ரூ.20.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அத்தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்ப :1.** மன்றம் அனுமதி அளிக்கலாம்,

2. மேற்காண் செலவின தொகை ரூ.20.00 இலட்சத்தினை பொது நிதியில்இருந்துமேற்கொள்ளவும்மன்றம் அனுமதிஅளிக்கலாம்.
3. SBM . பொது நிதி ஏதாவது ஒரு திட்டத்தின் கீழ் நிதி ஆதாரம் பெற்றபின்பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு: 1,2 மற்றும் 3அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1192**

40. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரவில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு பணிகளுக்கு தேவையான விழிப்புணர்வு பிளக்ஸ் போர்டுகள் கடந்த 31.12.2024 முதல் 22.04.2025 வரை பல்வேறு விழிப்புணர்வு பணிகளுக்கு M/s. STROKE DIGITAL 5, முத்துஷா வீதி, கோபிசெட்டிபாளையம் அவர்களிடம் ரூ.3670/– ற்கு விழிப்புணர்வு விளம்பர பலகைகள் தயார் செய்து பொது இடங்களில் அமைத்தும், முகாம் நடைபெறும் போது விளம்பர பதாகைகள், பொருத்தியும் பணிகளை அவ்வப்போது மேற்கொண்டதை மன்றம் அங்கீகரித்து அந்நிறுவனத்திற்கு கீழ்காணும் விபரப்படி தொகை வழங்க வேண்டியுள்ளது.

| **வ. எ** | **பிளக்ஸ் தயார் செய்த தேதி** | **விபரம்** | **அளவு** | **எண்ணிக் கை** | **வழங்கப்பட வேண்டிய தொகை ரூ.** |
|---|---|---|---|---|---|
| 1 | 31.12.2024 | குழந்தைகள் பாதுகாப்பு குழு கூட்டம் என்ற Flex தயார் செய்த வகையில் | 4' X 2' | 1 | 250/– |
| 2 | 10.01.2025 | புகையில்லா போகி என்ற Flex தயார் செய்த வகையில் | 6' X 4' | 1 | 460/– |
| 3 | 10.01.2025 | புகையில்லா போகி என்ற Flex Pasting செய்த வகையில் | – | – | 300/– |
| 4 | 13.02.2025 | குப்பை தரம் பிரித்தல் என்ற Flex தயார் செய்த வகையில் | 6' X 4' | 1 | 460/– |
| 5 | 21.02.2025 | மாபெரும் நெகிழி சேகரிப்பு முகாம் மற்றும் விழிப்புணர்வு முகாம் என்ற Flex தயார் செய்த வகையில் | 6' X 3' | 1 | 400/– |
| 6 | 17.03.2025 | Swachh Bharath என்ற Flex தயார் செய்த வகையில் | 4' X 3' | 3 | 1050/– |
| 7 | 24.03.2025 | ஆண்கள், பெண்கள் கழிப்பிறை செல்லும் வழி என்ற Flex தயார் செய்த வகையில் | 2' X 1. 5 ' | 4 | 400/– |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | 22.04.2025 | தமிழில் பெயர் பலகை வைத்தல் என்ற Flex தயார் செய்த வகையில் | 5' X 3' | 1 | 350/- |
| | | | மொத்தம் | 13 | ரூ. 3,670/- |

மேற்படி தொகையினை M/s. STROKE DIGITAL 5, முத்துஷா வீதி, கோபிசெட்டிபாளையம் அவர்களுக்கு வழங்கிட மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.க.எண். 648 /2023/எச்1)

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதிலியிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக் குறிப்பு: 1, மற்றும் 2அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1193**

41. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான மொடச்சூர் வாரசந்தை காலியிடத்தில் உள்ள மீன் கடைகளுக்கு சுங்க கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 24.04.2025 ஆம் தேதியன்று மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்கண்ட குத்தகை இனத்திற்கு ஏலம் கோர யாரும் முன்வரவில்லை. பின்வரும் விபரப்படி இரண்டு நபர்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டனர்.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் விபரம் | ஒப்பந்தப்புள்ளி கோரிய ஆண்டு குத்தகை தொகை |
|---|---|---|
| 1 | திரு. கே. செந்தில்குமார்<br>த/பெ. கிருஷ்ணசாமி<br>பி.பி,எம். நகர்பச்சமலைரோடு<br>கோபிசெட்டிபாளையம்9843125164 | ரூ.33,000/- |
| 2 | திருமதி. எஸ். சித்ராதேவி<br>த/பெ. சண்முகம்<br>நெ, 10பி டி.ஆர்,ஆர், நகர்<br>கோபிசெட்டிபாளையம்<br>9751550779 | ரூ.33,100/- |

மேற்கண்ட விபரப்படி இரண்டு நபர்கள் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் திருமதி.சித்ராதேவி என்பவர் ரூ.33,100/-க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை கோரியுள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொகையானது, கடந்த 2024-2025 ஆம் ஆண்டு குத்தகை தொகை ரூ.31,422/- ஐ விட ரூ.1678/- கூடுதலாகவும், கடந்த மூன்றாண்டு சராசரி குத்தகை தொகை ரூ, 29,949/-ஐ விட ரூ.3151/- கூடுதலாகவும் உள்ளது.

வருவாய் ஆய்வர் தனது 24.04.2025 ஆம் தேதிய குறிப்பில், முந்தைய வாரச்சந்தை காலியிடத்தில் மீன் கடைகளுக்கு சுங்க கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமம் 11.04.2025 ஆம் தேதியுடன் முடிவடைவதால், வாரச்சந்தை காலியிடத்தில் மீன் கடைகளுக்கு சுங்கம் வசூல் செய்யும் உரிமத்திற்கு ரூ.33100/-க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திருமதி. எஸ். சித்ராதேவி என்பவருக்கு 01.05.2025 முதல் 31.05.2028 முடிய மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.

எனவே மேற்படி வாரச்சந்தை காலியிடத்தில் மீன் கடைகளுக்கு சுங்க கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ.33,100/- கோரியுள்ள திருமதி, சித்ராதேவி த/பெ சண்முகம் என்பவருக்கு 01.01.2025 முதல் 31.05.2028 முடிய மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது, (ந.க.எண். 2560/2023/அ3 )

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1194**

42. கோபிசெட்டிபாளையம் நகராட்சியின் 2024–2025 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை நகர்மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1195**

43. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் KNMT திட்டத்தின் கீழ் 2023–2024 ஆம் ஆண்டு புதியதாக கட்டப்பட்ட அறிவுசார் மையத்திற்கு Care Taker பணியிடத்தினை அமைக்க தெரிவிக்கப்பட்டதில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்களின் வெளிக்கொணர்வு முகமை மூலம் நிரப்பி Snakar Labour Contract நிறுவனம் மூலம் பணியாளரை பணியமர்த்தப்பட்டுள்ளது. எனவே நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைப்படி (ந.க.எண் 2878/2023/பி1 நாள் 22.01.2024) அறிவுசார் மையத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க 2025–2026 ஆம் ஆண்டிற்கான உத்தேச செலவினம் ரூ.5,00,000/–இலட்சம் தேவைப்படுகிறது. இச்செலவினத்தை நகராட்சியின் கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்க வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்காண் செலவின தொகை ரூ.5.00/– இலட்சத்தினை நகராட்சி கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்

**அலுவலகக் குறிப்பு: 1, மற்றும் 2அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1196**

44. கோபிசெட்டிபாளையம் நகராட்சி வீரபாண்டி கிராமம் வார்டு– B , பிளாக்–36, நகரளவை எண்.87,88 இல் 0.2193 ச.மீ பரப்பளவு பழைய பேருந்து நிலைய கட்டிடமானது சுமார் 50 வருடங்களுக்கு மேலாக நகராட்சியின் கட்டுப்பாட்டில் இயங்கிவருகிறது, இது நகரளவை ஆவணங்களில் சர்கார் புறம் போக்கு , பழைய பேருந்து நிலையம், சைக்கிள், கார் நிறுத்துமிடம் என உள்ளது.பழைய பேருந்து நிலைய கட்டிடமானது நகராட்சியால் திட்டப்பணிகளின் மூலம் கட்டப்பட்ட கட்டிடமாகும். மேலும் பழைய பேருந்து நிலையம் வணிக வளாக கடைகள் கட்டப்பட்டு தற்பொழுது மிகவும் பழைய கட்டிடமாக உள்ளது இதில் அரசின் நிதியுதவி பெற்று மிகவும் பழுதடைந்துள்ள மேற்படி கட்டிடத்தில் அபிவிருத்தி பணிகள் செய்யப்பட வேண்டியுள்ளது.

மேற்காணும் பழையபேருந்து நிலையம், சர்கார்புறம் போக்கு என உள்ளதை நகரளவை ஆவணங்களில் ஆணையாளர், கோபிசெட்டிபாளையம் நகராட்சி என பெயர் மாற்றம் செய்து தரகோருவது தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் ஈரோடு அவர்களுக்கு தீர்மானம் நிறைவேற்றி முன்மொழிவுகள் அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1257/2024/எப்1)

**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. முன்மொழிவுகள் அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு: 1, மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1197**

45. கோபிசெட்டிபாளையம் நகராட்சி மொடச்சூர் கிராமம் வார்டு–C , பிளாக்–25, நகரளவை எண்.51 இல் 2.0625 ஹெக்டர் பரப்பில் இயங்கி வரும் வார சந்தையானது , சுமார் 50 வருடங்களுக்கு மேலாக நகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள சந்தையாக இருந்து வருகிறது. ஆனால், இது நகரளவை ஆவணங்களில் சர்கார் புறம் போக்கு சந்தை என பதிவு செய்யப்பட்டுள்ளது, தற்போது இச் சந்தை வளாகத்தில் நகராட்சியின் ஆடுவதை கட்டிடம் (Slaughter House) , உழவர் சந்தை, வீடற்றோர் தங்கும் காப்பகம் , நவீன சந்தை வளாகம், பருப்பு சந்தைகள் மற்றும் வாரசந்தை ஆகியவை இயங்கிவருகிறது. இவை அனைத்தும் அரசின் வளர்ச்சி திட்டப்பணிகளில் நிதி உதவி பெற்று நகராட்சியின் மூலம் கட்டப்பட்ட கட்டிடங்கள் ஆகும் மேலும் கோபிசெட்டிபாளையம் நகராட்சி தற்போது தேர்வு நிலை நகராட்சியாக உள்ளதாலும் . இது சிறப்பு நிலைக்கு தரம் உயர வாய்ப்புகள் உள்ளதாலும், நகராட்சியில் அபிவிருத்தி பணிகள் சந்தைவளாகத்தில் மேற்கொள்ள ஏதுவாகவும் நகராட்சி கட்டுப்பாட்டில் 50 வருடங்களுக்கும் மேலாக இயங்கிவரும் நகராட்சி சந்தைவளாகப்

பகுதியை, நகரளவை ஆவணங்களில் ஆணையாளர், கோபிசெட்டிபாளையம் நகராட்சி என பெயர் மாற்றம் செய்து தர கோருவது தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் , ஈரோடு அவர்களுக்கு இத்தீர்மானத்தை நிறைவேற்றி முன்மொழிவுகள் அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1185/2024/எப்

**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. முன்மொழிவுகள் அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு: 1, மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 1198**

46. இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவின் பராமரிப்பில் உள்ள TN 36 J 2139 Frond End Loader வாகனத்தின் டயர்கள் தேய்ந்துள்ளதால் நான்கு புதிய டயர்கள், டியூப்கள் புதியதாக வாங்கி பொருத்தி கெள்ளவும் அதற்காகும் செலவினத்திற்கும் நகர்மன்றம் தீர்மான எண். 1045 நாள். 31.12.2024 ல் அனுமதி அளித்துள்ளதின் பேரில் மேற்படி வாகனத்திற்கு MRF கம்பெனியின் டயர், டியூப்கள் விற்பனை செய்யும் அங்கீகரிக்கப்பட்ட டீலரான M/s. கோபி மோட்டார்ஸ், கோபிசெட்டிபாளையம் அவர்களிடம் டயர்கள், டியூப்களின் விலைவிபரம் பெறப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு :

| | | | |
|---|---|---|---|
| MRF – | Sakthi Tyre and Tube Size 8.3 X 24 | 2 No's | Rs.65625.00 |
| MRF – | Sakthi Tyre and TubeSize 14.9.28 | 2 No's | |
| | GST 28 % | | Rs. 18,375.00 |
| **TOTAL** | | | **Rs. 84000.00** |

மேற்படி நிறுவனத்தினரிடம் புதிய டயர் டியூப்கள் நான்கு எண்ணிக்கை கொள்முதல் செய்து கொள்ளவும் அதற்காகும் செலவினம் ரூ. 84,000/- ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1982/2024/எச்1)

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்

